මධ්‍යම පළාත් සභාවේ රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව
மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழு
**Public Service Commission of Central Provincial Council**

අංක 244, කටුගස්තොට පාර, මහනුවර
இல. 244, கடுகஸ்தொட்டை வீதி, கண்டி
No. 244, Katugasthota Road, Kandy.

**web site***: www.psc.cp.gov.lk* **e-mail:** *cpcpsc@yahoo.com*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| කාර්යාලය<br>காரியாலயம்<br>Office | 081-2213097 | ලේකම්<br>செயலாளர்<br>Secretary | 081-2213096 | සහකාර ලේකම්<br>உதவி செயலாளர்<br>Asst. Secretary | 081-5631321 | ෆැක්ස්<br>பெக்ஸ்<br>Fax | 081-2213096<br>081-2213097 |
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | CPC/PSC/**10**/SUP/MERIT - 2025 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | | | දිනය<br>திகதி<br>Date | **2025.09.** |

மத்திய மாகாண சபையின்,
பிரதான செயலாளர்,
ஆளுநர் செயலாளர்,
அனைத்து அமைச்சுச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
நிறுவனத் தலைவர்களுக்கு,

**<u>திறமை அடிப்படையில் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2025</u>**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரினால் 2025.07.11 ஆம் திகதிய அரசாங்க நிருவான சுற்றறிக்கை இல. 16/2025 மூலம் மேற்குறிப்பிட்டுள்ள பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அவ்வறிவித்தலை மத்திய மாகாணத்திற்கு ஏற்புடையாக்குவதற்கு ஆளுநர் செயலாளின் இல. ஜீசீபீ/01/1/1 மற்றும் 2025.07.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அத்துடன் மேற்குறிப்பிட்டுள்ள பரீட்சை அறிவித்தலினை வெளிவிடுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் இல. 5/4/1/08/2025 (24) மற்றும் 2025.09.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணக்கப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளது.

02. அதனடிப்படையில், மத்திய மாகாண அரச சேவைக்குரிய உள்ளக அறிவித்தல் www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், அச்சுற்றறிக்கை மற்றும் மத்திய மாகாண கௌரவ. ஆளுநரினால் 2014.04.07 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு 2013.04.02 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக்குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைய, உங்களது நிறுவனங்களில் சேவையாற்றும் மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையிலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாதிரி விண்ணப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவங்களை 2025.10.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் இவ்வாணைக்குழுவிற்கு அனுப்புமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. பரீட்சைக் கட்டணம் ரூபா. 600/= ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை மத்திய மாகாண சபை பிரதான செயலாளரின் 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் வகையில் மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரிலேயே பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின், உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டி அனுப்புமாறு விண்ணப்பதாரர்களை தெளிவூட்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ ஆணைக்குழுவின் கட்டளைப் படி

திரு. கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

பிரதிகள்

01. மாவட்ட செயலாளர் (கண்டி/ மாத்தளை/ நுவரெலியா) – கவனத்திற்கு
02. மத்திய மாகாண அனைத்து பிரதேச செயலாளர்களுக்கு – இப்பரீட்சைக்குரிய பரீட்சைக் கட்டணத்தை 2025.10.21 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளும் பொருட்டு